ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක **2254/6 - 2021** නොවැම්බර් මස **15** වැනි සඳුදා - **2021.11.15**

2254/6 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 5/2011 (iii)

**2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டம்**

2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 13 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 89 ஆம் பிரிவின் கீழ் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ஜொன்ஸ்ரன் சேவியர் பெர்னாந்து,**
நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

பத்தரமுல்லை,
2021, நவெம்பர் 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள், 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் (பாவனையாளர் கட்டண) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் 2021, நவெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 2252/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையால் வெளிப்படுத்தப்பட்ட "மீரிகம - குருநாகல்" பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலைக்கு "(மத்திய கடுகதிவழியின் பகுதி)" ஏற்புடையனவாதல் வேண்டும்.

1A - PG 5615 - 110 (2021/11)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. (1) பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையைப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதி, அத்தகைய பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை அத்தகைய சாரதியினால் பயன்படுத்தப்படுவது தொடர்பில், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வீதங்களில் பாவனையாளர் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டணமானது, பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையின் முழுத்தூரம் அல்லது அதன் பாகம் தொடர்பில் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த வாகனங்களுக்கு வெவ்வேறு பாவனையாளர் கட்டணங்கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) பாவனையாளர் கட்டணம் காசுமூலம் கையினால் செலுத்தப்படல் வேண்டும்.

4. (1) இடைமாற்றுப்பாதை ஒன்றிலிருந்து பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் பிரவேசிக்கும் சாரதி ஒவ்வொருவரும், பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாகத் தொடர்ந்து செல்வதற்கு அனுமதிக்கப்படு முன்னர், அத்தகைய இடைமாற்றுப்பாதையில் கடமையிலிருக்கும் பணப்பொறுப்பாளரிடமிருந்து நுழைவுச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குவிதியின் (1) ஆம் உப ஒழுங்குவிதியின் கீழ் நுழைவுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு சாரதியும், எந்த இடைமாற்றுப்பாதைக்கூடாகப் பாவனையாளர் கட்டண நெடுஞ்சாலையை விட்டு வெளியேறுவதற்கு உட்கருதுகின்றாரோ அந்த இடைமாற்றுப் பாதையின் கொடுப்பனவு நிலையத்தை அடையும்வரை அவர் அத்தகைய நுழைவுச்சீட்டை அவரது உடைமையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்.

(3) வாகனமொன்று அத்தகைய பாவனையாளர் கட்டண நெடுஞ்சாலையைவிட்டு வெளியேறும் நோக்கத் துக்காக இடைமாற்றுப்பாதையொன்றின் கொடுப்பனவு நிலையத்தை வத்தடைகின்றவிடத்து, அவ்வாகனத்தின் சாரதி, அவர் எந்த இடைமாற்றுப்பாதையின் ஊடாகப் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையினுள் பிரவேசித்தாரோ, அந்த இடைமாற்றுப்பாதையில் பெற்றுக்கொண்ட நுழைவுச்சீட்டைப் பணப்பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(4) பணப்பொறுப்பாளர், செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகையை வாகனமொன்றின் சாரதிக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் சாரதி அத்தகைய இடைமாற்றுப்பாதையினூடாகக் கடந்துசெல்ல அனுமதிக்கப்படுவதற்கு முன்னர், அத்தகைய தொகையைச் செலுத்துதலும், அத்தகைய கொடுப்பனவு தொடர்பிலான பற்றுச்சீட்டொன்றைப் பணப்பொறுப்பாளர் வழங்குதலும் வேண்டும்.

(5) சாரதி நுழைவுச்சீட்டைப் பணப்பொறுப்பாளரிடம் ஒப்படைக்க இயலாதவராக இருக்குமிடத்து, சாரதியானவர், ஆகக் கூடிய சாத்தியமான உட்பிரவேச வலயத்திலிருந்து உள்ளபடியான வெளிச் செல்கை மையம் வரையான பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையின் முழுத்தூரத்துக் காகவும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ இல் குறித்துரைக்கப்பட்ட வீதங்களிலான பாவனையாளர் கட்டண மொன்று அவருக்கு விதிக்கப்படுதலும் வேண்டும்.

5. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 73 ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகப் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாகத் தேவைப்படுத்தப்பட்ட இடங்களில் போதிய எண்ணிக்கையிலான நுழைவாயில்கள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக அவ்வாறு அமைக்கப்பட்ட நுழைவாயில்கள் அதிகாரசபையால் சொந்தமாக வைத்திருக்கப்படுதலும் தொழிற்படுத்தப்படுதலும் மற்றும் பேணப்படுதலும் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு நுழைவாயிலிலும் பணப்பொறுப்பாளர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) பணப்பொறுப்பாளர் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நுழைவாயில் ஒவ்வொன்றிலும், அத்தகைய பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையைப் பயன்படுத்துகின்ற சாரதி ஒவ்வொருவரிடமிருந்தும் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட வாகனங்களின் வகுதிகளிலிருந்து அத்தகைய வீதங்களில் பாவனையாளர் கட்டணத்தைச் சேகரிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

ஆயின், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்டதும் அத்தகைய கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டதுமான வகுதியைச் சேர்ந்த வாகனமொன்றைச் செலுத்துகின்ற சாரதி ஒருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

6. பணப்பொறுப்பாளர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் அன்றைய நாளினது கட்டணங்களின் சேகரிப்பை அதிகார சபையால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளித்தலும், அத்தகைய தொகை தொடர்பில் பற்றுச்சீட்டு ஒன்றைப் பெறுதலும் வேண்டும்.

7. பாவனையாளர் கட்டணமாக அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகும் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பேணுவதற்குமான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக -

"பணப்பொறுப்பாளர்" என்பது, ஓர் இடைமாற்றுப்பாதையிலான நுழைவாயில்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஓர் அலுவலர் என்று பொருளாகும்.

"பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை" என்பது, மீரிகமவிலிருந்து (36.981கி.மீ.) குருநாகல் வரையான (77.891கி.மீ.) மீரிகம - குருநாகல் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை (மத்திய கடுகதி வழியின் பகுதி) என்று பொருளாகும்.

ஒழுங்கு விதிகள் 3 மற்றும் 5

**அட்டவணை**

பாகம் அ

| வகுதி 1 வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)<br>(இரண்டு அச்சுக்கள் மற்றும் நான்கு சில்லுகளைக் கொண்ட வாகனங்கள் அல்லது இரண்டு அச்சுக்கள் மற்றும் ஆறு சில்லுகளைக் கொண்ட இருநோக்கு வாகனங்கள்) | | | | |
|---|---|---|---|---|
| தூரம் | 17.81 | கி.மீ. 14.79 | கி.மீ. 5.45 | கி.மீ. |
| | மீரிகம வடக்கு இடைமாற்றுப் பாதை | நாக்கலகமுவ இடைமாற்றுப் பாதை | தம்பொக்க இடைமாற்றுப் பாதை | குருநாகல் இடைமாற்றுப் பாதை |
| நாக்கலகமுவ இடைமாற்றுப் பாதை | 150 | | | |
| தம்பொக்க இடைமாற்றுப் பாதை | 200 | 150 | | |
| குருநாகல் இடைமாற்றுப் பாதை | 250 | 150 | 100 | |
| யக்கபிட்டிய இடைமாற்றுப் பாதை | 250 | 150 | 100 | |

| வகுதி 2 வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா) (இரண்டு அச்சுக்கள் மற்றும் ஆறு சில்லுகளைக் கொண்ட வாகனங்கள்) | | | | |
|---|---|---|---|---|
| தூரம் | 17.81 | கி.மீ. 14.79 | கி.மீ. 5.45 | கி.மீ. |
| | மீரிகம வடக்கு இடைமாற்றுப் பாதை | நாக்கலகமுவ இடைமாற்றுப் பாதை | தம்பொக்க இடைமாற்றுப் பாதை | குருநாகல் இடைமாற்றுப் பாதை |
| நாக்கலகமுவ இடைமாற்றுப் பாதை | 200 | | | |
| தம்பொக்க இடைமாற்றுப் பாதை | 300 | 200 | | |
| குருநாகல் இடைமாற்றுப் பாதை | 350 | 250 | 150 | |
| யக்கபிட்டிய இடைமாற்றுப் பாதை | 350 | 250 | 150 | |

| வகுதி 3 வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா) (இரண்டு அச்சுக்களுக்கு மேற்பட்டவற்றைக் கொண்ட வாகனங்கள்) | | | | |
|---|---|---|---|---|
| தூரம் | 17.81 | கி.மீ. 14.79 | கி.மீ. 5.45 | கி.மீ. |
| | மீரிகம வடக்கு இடைமாற்றுப் பாதை | நாக்கலகமுவ இடைமாற்றுப் பாதை | தம்பொக்க இடைமாற்றுப் பாதை | குருநாகல் இடைமாற்றுப் பாதை |
| நாக்கலகமுவ இடைமாற்றுப் பாதை | 300 | | | |
| தம்பொக்க இடைமாற்றுப் பாதை | 500 | 250 | | |
| குருநாகல் இடைமாற்றுப் பாதை | 550 | 350 | 150 | |
| யக்கபிட்டிய இடைமாற்றுப் பாதை | 550 | 350 | 150 | |

குறிப்பு - இருதிசைகளுக்கும் ஒரே வீதங்கள்

ஒழுங்குவிதி 5

பாகம் ஆ

பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையின் மீது பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படும் வாகனங்கள்

1. ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் சனாதிபதி தொடரணியின் பாகமாக அமைந்துள்ள எல்லா வாகனங்களும் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக செலுத்தப்படும் வரை அத்தகைய வாகனம்.
2. ஏதேனும் கொடுக்கப்பட்ட நேரத்தில் பிரதம அமைச்சர் தொடரணியின் பாகமாக அமைந்துள்ள எல்லா வாகனங்களும் பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலை வழியாக செலுத்தப்படும் வரை அத்தகைய வாகனம்.
3. பாவனையாளர் கட்டண தேசிய நெடுஞ்சாலையைப் பயன்படுத்துகின்ற எல்லாப் பிணியாளர் வண்டிகளும்.

11 - 673